மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய வேண்டுகோளையும், இந்த அவை உறுப்பினர்கள் பல்வேறுபட்டவர்களுடைய பொதுக்கருத்துக்களையும் அறிந்த வகையில், மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய வேண்டுகோள் ஏற்றுக் கொள்ளக் கூடியது என்று நான் கருதுகிறேன். எனவே திரு. பண்ருட்டி ச. இராமச்சந்திரன் அவர்களுக்கு வழங்கிய தண்டனை—

1. 4—7—1991 ஆம் நாளன்று ஆளுநர் அவையில் உரையாற்றத் தொடங்கியபோது நடைபெற்ற விரும்பத்தகாத சம்பவங்கள் தொடர்பாக ஓர் உறுப்பினரை பேரவைப் பணிகளின்றும் தற்காலிக நீக்கம் செய்த நாட்களைக் குறைத்துப் பேரவைத் தலைவர் அளித்த தீர்ப்பு

ஏற்கனவே நான் தண்டனை வழங்கி அன்று கொடுத்த அந்த ஒரு நாள், அவையிலிருந்து நீக்கப்பட்ட அந்தத் தண்டனை போதும் என்று கருதி இன்று முதல் திரு. பண்ருட்டி ச. இராமச்சந்திரனுக்கு அளிக்கப்பட்ட தண்டனையை ரத்துச் செய்து திரு. ச. பண்ருட்டி இராமச்சந்திரன் மீண்டும் அவைக்கு வரலாம் என்று தீர்ப்பு வழங்குகிறேன். (குறுக்கீடுகள்) இதிலே எதுவும் வேண்டாம்.

டாக்டர் தே. குமாரதாஸ் : தலைவர் அவர்களே.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே எதுவும் வேண்டாம்.

டாக்டர் தே. குமாரதாஸ் : நீங்கள் வழங்கிய தீர்ப்புக்கு நன்றி. அதே நேரத்தில்....

2. அறிவிப்பு

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது பேரவைக்கு ஓர் அறிவிப்பைச் செய்ய இருக்கிறேன்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9, உள்விதி 1-ன் கீழ் கீழ்க்கண்ட உறுப்பினர்களை இப்பேரவையின் முதல் கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக (Panel of Chairmen) நியமிக்கிறேன்.

1. திரு. க. அர்ச்சுனன்.
2. திரு. வ. சத்தியமூர்த்தி.
3. திருமதி ரமணி நல்லதம்பி.
4. டாக்டர் தே. குமாரதாஸ்.

3. விதி 110இன் கீழ் முதலமைச்சரின் அறிக்கை

பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் உண்ணாவிரதம் இருப்பது தொடர்பாக நடைபெற்ற வன்முறைச் சம்பவங்கள் மற்றும் நடவடிக்கைகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை விதி 110-இன் கீழ் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இப்போது பேரவைக்கு ஓர் அறிக்கையை அளிப்பார்கள்.